மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
பல்லாவரம்

O.S.NO.578/2023
Old No. 685/2007
PW.3

பெயர்: ஆறுமுகம் த.பெ. லட்சிணன் நாள் : 12.09.2023

**<u>முதலாம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் தற்போது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் தலைமை சர்வேயராக பணியாற்றி வருகின்றேன். எனக்கு வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரப்பெற்றுள்ளதா என்றால் ஆம். நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எங்களது அலுவலகத்தில் இருந்து கடிதம் (Ortharization letter) பெற்றுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு பெறாததால் என்னை சாட்சியாக விசாரிக்க இயலாது என்றால் சரியல்ல.

06.06.2017–ல் தேவநாதன் சாட்சியம் அளித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி தேவநாதன் என்பவர் எங்களது அலுவலகத்தில் எஸ்டேட் அலுவலராக பணிபுரிந்து வந்தார். தேவநாதன் என்பவர் ஓய்வு பெற்று விட்டார். அவருக்கு பதிலாக நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் ஆம்.

வழக்கின் விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். வழக்கில் நான் 3–ம் பிரதிவாதியாக உள்ளேன் என்றால் ஆம். இவ்வழக்கில் எங்களது தரப்பில் இருந்து பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பதிலுரை தாக்கல் செய்யாததால் 14.09.2009–தேதியன்று 3–ம் பிரதிவாதிக்கு எதிராக X parte உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

06.06.2017–தேதியில் 3–ம் பிரதிவாதி தனது வழக்கறிஞருடன் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க ஆஜராகி உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு ஆஜராகும் போது ஒருதலை பட்ச உத்தரவினை Set aside செய்து நீதிமன்றத்தில் ஆஜராக

வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி விவரம் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

நான் 3–ம் பிரதிவாதி தரப்பில் பதிலுரை எதுவும் தாக்கல் செய்யாமல் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியாக இருந்து வாதி தரப்பில் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 மற்றும் 15 வாதிக்கு சாதகமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அரசுக்கு சாதகமாக வா.சா.ஆ.14 மற்றும் 15 தாக்கல் செய்யாமல் வாதிக்கு சாதகமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2013–ம் ஆண்டில் முதலாம் பிரதிவாதி வழக்கில் ex parte செய்யப்பட்டு மீண்டும் அவை ரத்து செய்யப்பட்ட விவரம் தெரியாமல் அவர் மீது வா.சா.ஆ.14 மூலம் நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்குத் தெரியாது. எதிருரை தாக்கல் செய்து வழக்கை நடத்தி வந்தால் வழக்கின் விவரங்கள் தெரிய வந்திருக்கும்.

3–ம் பிரதிவாதி அளித்த சாட்சியம் செல்லாது என்றும் மனு எண்.828/2017 தாக்கல் செய்யப்பட்டு அவை தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவற்றை எதிர்த்து முதலாம் பிரதிவாதி தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் (CMA.No.14/2019) மேல்முறையீடு செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. விவரங்கள் தெரிந்தும் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தற்போது அவை ஆலந்தூர் சார்பு நீதிமன்றத்தில் (I.A.07/2021) ஆக மாற்றம் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. வா.சா.ஆ.15 நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எங்களது அலுவலகத்தின் விதிமுறைப்படி நிலங்களை அளக்க வேண்டுமென்றால் அதற்கான படி செலுத்த வேண்டியது அவசியம் என்றால் ஆம்.

இவ்வழக்கில் வாதி எங்கள் அலுவலகத்தில் வழக்கு சம்பந்தமாக மனு தாக்கல் செய்துள்ளாரா என்றால் மனு தாக்கல் செய்யவில்லை. வழக்கு நிலுவையில் உள்ளதால் வழக்கு சொத்திற்கு சென்று பார்வையிட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.15 2007–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

மனு கொடுக்கப்பட்டதால் தான் சர்வேயர் அனுப்பப்பட்டுள்ளார் என்றால் ஆம். வாதி மனு கொடுத்து அதற்காக ரசீது ஏதும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. 2–ம் வாதி அவ்வாறு பணம் செலுத்தி ரசீது பெறவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக மனு கொடுத்தால் இரு தரப்பினருக்கும் அறிவிப்பு அனுப்பி வைத்து நிலத்தினை அளவு செய்வோம் என்றால் ஆம்.

இருதரப்பினருக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததால் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பதால் நேரடியாக தரப்பினரை அழைத்து வழக்கு சொத்தினை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வழக்கு நிலுவையில் இருக்கும் போது எவ்வாறு நான் வழக்கு சொத்தை அளவீடு செய்வேன் என்றால் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி இருந்ததால் அளவீடு செய்த உடனடியாக அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

இருதரப்பினர்கள் இல்லாமல் நான் அளவீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. அளவீடு செய்யும்போது இருதரப்பினர்கள் இருந்தார்கள் என நிரூபிக்க ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அளவீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் அதன் பின்பு அளவீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் 2007–ல் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.15–ல் குறிப்பாக எந்த தேதியில் அளவீடு செய்யப்பட்டுள்ளது என்றால் 20.07.2007 என குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களது அலுவலக அதிகாரியின் உத்தரவின் பெயரில் தான் வா.சா.ஆ.15 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆம். மேற்படி உத்தரவினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதில் கையொப்பம் இட்ட அலுவலர் செந்தாமரை கண்ணன் எங்கள் அலுவலகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

வழக்கின் ஏ ஷெட்யூல் சொத்து என்னவென்று தெரியாது. வழக்கின் ஏ ஷெட்யூல் சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் அதை பற்றி தெரியாது. 2–ம் வாதி தனது நீதிமன்ற விசாரணையில் ஏ ஷெட்யூலான தனது சொத்தை சுற்றி நான்கு பக்கமும் சுற்று சுவர் உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் தெரியாது. (வாதி தரப்பு

வழக்கறிஞர் எந்த தேதியில் 2–ம் வாதி சாட்சியம் அளித்துள்ளார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது)

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.